439

439

NARKATHAIGAL

BY

P. SUNDARARAJAN B.A., L.T.

2 FEB 1947

IV
Class

M. D. NAGABHUSHANAM & SON.
MADRAS.

நற்கதைகள்

முதற் பகுதி

நான்காம் வகுப்பு

894.8113

பி. சுந்தரராஜன், B. A., L. T.,

2174

பிரசுர கர்த்தர் :

M. D. நாகபூஷணம் அண்டு ஸன்,

சென்னை.

காப்பிரைட்] 1941 [விலை அணா, 4.

முதற்பதிப்பு

031/1

முகவுரை

அறிவும், குணமும், தேகவலிமையும் மனிதனுக்கு இன்றியமையாதனவாம். ஆதலின், அவைகளின் அவசியத்தை மாணவர்களுக்கு அடிக்கடி எடுத்துக் காட்டவேண்டுவது நம் கடமையாகும். மேற்கூறிய விஷயங்களே மிகச் சிறந்தவை என்பதை மாணவர்கள் உறுதியாய் நம்பவேண்டும். அந்நம்பிக்கையை உண்டாக்கப் பல நற்கதைகளை நாம் எளிய நடையில் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இந்த நோக்கத்துடனேதான் இந்நற்கதைகள் எழுதப்பட்டுள்ளன. இவை மாணவர்களுக்கு நன்மை பயக்கும் என நம்புகிறேன்.

பி. சுந்தரராஜன்.

2174

பொருளடக்கம்

பொருள்		பக்கம்
1.	கடவுள் ஒருவரே.	— 7
2.	அன்புள்ள தந்தை	— 9
3.	பிரபுவும் பிச்சைக்காரனும்	— 11
4.	சேஷன்	— 13
5.	மட்டை இராமசாமி	— 15
6.	வீர சிங்கன்	— 17
7.	தேகப்பயிற்சியின் வெற்றி	— 19
8.	சோம்பலின் கெடுதி	— 22
9.	நல்ல செலவுகள்	— 25
10.	சாலமன்	— 27
11.	நீதி மன்னர்	— 30
12.	குரு பக்தி	— 34
13.	துறவியாரும் துஷ்டனும்	— 36
14.	நல்ல மாணுக்கன்	— 38
15.	குடிகாரக் குப்பன்	— 41
16.	இயேசு நாதரின் உபதேசங்கள்	— 45
17.	சாரணச் சிறுவன்	— 48
18.	நன்றியுள்ள சாரதி	— 51
19.	நட்பின் பயன்	— 54
20.	சிக்கனத்தால் சிறப்புற்ற சிதம்பரம்	— 58
21.	பணம்	— 61

நற்கதைகள்

முதற்பகுதி

1. கடவுள் ஒருவரே.

ஒரு நாள் மாலை நாலு மணிக்கு நாராயணன் என்னும் மாணவன் தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து, அன்று வந்த சமாசாரப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தான். அச்சமயம், தெருவில் இருவர் வெகு ஊக்கமாய் வாதாடிக்கொண்டிருந்தனர். நாராயணன் சற்றுக் கவனித்தான்; பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு வெளியே வந்தான்.

இராமன், சுப்பு என்னும் இரு மாணவர் மிகவும்கடுமையாய் வாதிட்டுக்கொண்டிருந்தனர். இராமன், "விஷ்ணுவே பெரியவர்," என்றான். சுப்பு, "சிவபெருமானே பெரியவர்," என்றான். நாராயணன் அவர்கள் பக்கத்தில் போய் நின்றுகொண்டு, கடகடவென்று சிரித்தான்.

இராமனும் சுப்புவும், "நாராயணா, ஏன் சிரிக்கிறாய்? எங்களைப்பரிகசிக்கிறாயா?" என்றனர்.

நாராயணன், "நண்பர்களே, நான் உங்களைப் பரிகசிக்கவில்லை; ஆனால், உங்கள் அறியாமைக்கு வருந்துகிறேன்," என்றான்.

அவ்விருவரும், "ஏனப்பா, நீ எங்களிடம் என்ன அறியாமையைக் கண்டுவிட்டாய் ?" என்றனர்.

நாராயணன், "உலகத்தில் எத்தனை கடவுளர் இருக்கின்றனர்? சொல்லுங்கள்," என்றான்.

"ஒவ்வொரு மதத்தினர்க்கும் ஒவ்வொரு கடவுள் உண்டு," என்று அவர்கள் சொன்னார்கள்.

"இதைத்தான் நான் 'அறியாமை' என்றேன். கடவுள் ஒருவரே. அவரே எல்லா உயிர்களையும் படைக்கிறார் ; காக்கிறார்; அழிக்கிறார். அவரே எங்கும் இருக்கிறார். இந்துக்களுக்கு ஒரு கடவுளும், மகமதியர்களுக்கு மற்றொரு கடவுளும் இருக்கிறார் என்று எண்ணுவது தவறு. இந்தச் சாதாரண உண்மையைக் கூட நீங்கள் இதுவரையில் அறிந்துகொள்ளவில்லையே! அதற்குத்தான் நான் விசனிக்கிறேன்.

"கடவுளை நாம் பல பெயர்களால் வழங்குகிறோம். சிலர் அவரைச் 'சிவன்' என்கின்றனர்

சிலர் 'விஷ்ணு' என்கின்றனர் ; சிலர் வேறு வித மாக வழங்குகின்றனர். பெயர் மட்டிலுந்தான் வித்தியாசம். ஆனால், கடவுள் ஒருவரே," என்ருன் நாராயணன்.

இராமனும் சுப்புவும் உண்மையைஉணர்ந்து நாராயணனுக்கு வந்தனம் அளித்தனர்.

---

2. அன்புள்ள தந்தை

கேசவன் என்னும் ஓர் ஏழைக் குடியானவன் இருந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவன் குருடன்; மற்ருெருவன் நொண்டி. தன் பிள்ளைகளின் நிலைமையை நினைத்து நினைத்துக் கேசவன் வருந்துவான். இப்படி இருக்கையில் அவன் மனைவியும் இறந்தாள். இத்துடன், அவன் கொடிய வயிற்று வலியாலும் பீடிக்கப்பட்டான். கேசவன் துயரம் அளவு கடந்துவிட்டது.

கேசவன் வயிற்று வலியால் வருந்துவதைப் பார்ப்பவர், மனம் கலங்குவர். அவ்வலி ஏற்படும் பொழுதுஅவன் தரையில் விழுந்து புரளுவான்; கோவென்று கதறுவான்; சுவரில் மோதிக் கொள்வான். அவன் படும்பாடு மிகவும் பரிதாபமாய் இருக்கும்.

ஒரு நாள் அவன், "ஐயோ! துன்பம் பொறுக்க முடியவில்லையே! நான் இனியும் உயிருடன் இருக்க வேண்டுமா! நான் இறப்பதே மேலானது!" என்று கதறினன்.

பிறகு அவன், "இது என்ன அறியாமை! சாவை நான் விரும்பலாமா? நான் இறந்து போனல், என் பிள்ளைகளை யார் காப்பாற்றுவார்? அவர்கள் கதி என்ன ஆகும்? எத்தனை கஷ்டங்கள் வரினும், நான் இனி அவைகளைப் பொருட்படுத்தமாட்டேன். உயிருடன் இருந்து என் அருமைப் பிள்ளைகளை இன்புறச் செய்வதே என் வேலை ஆகும். அவர்களுக்காக உழைப்பதைக் காட்டிலும், எனக்கு மேலான இன்பம் வேறு உண்டோ!" என்று எண்ணினன்.

அன்று முதல் அவன் தன் நோயை மறந்தான்; இரவும் பகலும் ஓடி உழைத்தான். உழைப்பினல், அவன் உடல் வலிமை பெற்றது; ஆரோக்கியமும் அடைந்தது. அவன் அதிகமாகப் பொருளும் தேடினன். நாளடைவில் அவன் நோயும் அவனை விட்டு விலகிற்று. அவனும் அவன் மக்களும் இன்பமாய் வாழ்ந்தார்கள்.



3. பிரபுவும் பிச்சைக்காரனும்

மாலை ஆறு மணிக்குப் பிரபு ஒருவர், "உலாவி வரலாம்," என்று வெளியே புறப் பட்டார். அப்பொழுது ஒரு பழுத்த கிழவி அவரிடம் வந்து, "ஐயா, நான் ஏழை. எனக்குப் பசியாய் இருக்கிறது. என்னால் நிற்கவும் முடியவில்லை. நான் உண்டு இரண்டு நாட்கள் ஆகின்றன. எனக்கு நாலணுத் தாருங்கள்," என்று சொன்னாள்.

பிரபு, "தாயே, கவலைப்படாதே! நாலு அணு அல்ல, உனக்கு எட்டு அணுத் தரு

கிறேன். நீ வேண்டியவற்றை வாங்கிப் புசி. இன்னும் உனக்குப் பணம் வேண்டும் பொழுதெல்லாம் என்னிடம் வா. நான் உனக்கு உதவி செய்கிறேன்," என்று சொல்லி, அவளிடம் எட்டு அணுக் கொடுத்தார். கிழவி மகிழ்ச்சியுடன் சென்ருள்.

இதை ஒரு வாலிபன் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பிரபுவை அணுகி, "ஐயா, எனக்கு நாலு அணுப் பிச்சை கொடுங்கள்," என்று கேட்டான்.

பிரபு அவனைப் பார்த்து, "அப்பா, நான் உனக்கு ஒரு காசும் தரமாட்டேன்; என் அருகில் நில்லாதே; விலகிச் செல்," என்று கோபமாய்ச் சொன்னர்.

அந்த வாலிபன், "ஐயா, அந்தக் கிழவிக்கு மட்டும் கொடுத்தீர்களே! எனக்குத் தரக் கூடாதா?" என்ருன்.

பிரபு, "ஆம், அதற்குக் காரணம் சொல்லுகிறேன்; கேள். அவள் பழுத்த கிழவி. அவளால் ஒரு வேலையும் செய்ய முடியாது. கூன், குருடு, நொண்டி, வயதானவர்கள், குழந்தைகள், பெண்பாலோர் முதலியவர்களுக்கு உதவ வேண்டும். அதுவே நியாயம் ஆகும். நீயோ, சரீர வலிமை உள்ளவன். நீ எந்த வேலையையும்

செய்யலாம். நீ ஏன் உழைத்து உண்ணலாகாது? உனக்குப் பிச்சை கொடுக்கலாமா? சோம்பேறிக்கு உதவி செய்யலாமா? அது தீமை செய்வதேயாகும். அதனுல் உனக்கு நன்மையும் இல்லை; உன் சோம்பலும் மிகும். ஆகையாலேதான் நான் உனக்குப் பிச்சை கொடுக்க மறுத்தேன்," என்று சொன்னுர்.

வாலிபன் வெட்கம் அடைந்தான். அன்று முதல் அவன் உழைத்துப் பொருள் தேடி உண்ணத் தொடங்கினுன். அதனுல் அவன் முன்னேற்றம் அடைந்தான்.

---

4. சேஷன்

சேஷன் என்னும் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். பல விஷயங்களை அறிய வேண்டுமென்ற விருப்பம் அவனுக்கு மிகுதியாய் இருந்தது. காலையிலும் மாலையிலும் அவன் தந்தையார் உலாவச் செல்வார். அவருடன் அவனும் செல்வான். அவரைப் பல கேள்விகள் கேட்டுத் தன் சந்தேகங்களை எல்லாம் அவன் தீர்த்துக்கொள்ளுவான்.

அவன், ஒரு நாள், "அப்பா, மாரி என்னும் பையன் என்னுடன் படிக்கிருன். அவன் மிக

வும் கெட்டவன். என் பென்சிலை அவன் நேற்றுத் திருடினுன். நான் அவனுக்குப் புத்தி புகட்ட விரும்புகிறேன். அவன் ஓர் அழகான பேனுவை வைத்திருக்கிருன். அவனுக்குத் தெரியாமல் அதை எடுத்துக்கொள்ள நினைக்கிறேன்," என்று தன் தந்தையாரிடம் சொன்னுன்.

அவர், "சேஷா, நீ சொல்வது எனக்கு வியப்பாயிருக்கிறது. மாரி திருடனுயிருந்தால், நீயும் திருடனுயிருக்க வேண்டுமா? இதுதானு அவனைத் தண்டிக்கும் முறை?

"ஒருவன் பட்டினி கிடக்கிருன். இன்னுமொருவன் புழுதியில் கிடந்து புரளுகிருன். மற்ருெருவன், கந்தையை உடுத்துத் திரிகிருன். அவ்விதமே நீயும் பட்டினி கிடந்தும், புழுதியில் புரண்டும், கந்தையை உடுத்தும் திரிய விரும்புகிருயா? நீ அவ்விதம் செய்ய விரும்பமாட்டாயல்லவா?

"மாரி உன் பென்சிலைத் திருடினுல், நீ செய்ய வேண்டுவது என்ன? 'திருடுவது கெடுதல்,' என்று அவனிடம் சொல்; அவனை நல் வழிப்படுத்த முயற்சி செய். உன்னுல் அவன் நன்மை அடையட்டும். அப்பொழுது உன்னை எல்லோரும் மதிப்பர்," என்ருர்.

சேஷன், "அப்பா, அப்படியே செய்கிறேன்," என்ருன்.

5. மட்டை இராமசாமி

சில ஆண்டுகளுக்கு முன், இராமசாமி என்ருேர் ஏழை இருந்தான். வறுமையால் அவன் பட்ட கஷ்டம் சிறிதன்று. கந்தையை உடுத்து அவன் வீதியில் திரிந்தான்; உறங்க இடம் இல்லாமல், தெருக்களில் படுத்து உறங்கினுன்; உண்ண உணவின்றி, அவன் பல தடவை பட்டினி கிடப்பதுமுண்டு.

இப்படிப் பல நாட்கள் கழிந்தன. பின்பு அவன் ஒரு தேங்காய்க் கடையில் வேலைக்கமர்ந்தான். நாள் முழுதும் தேங்காய்களின் மட்டைகளை உரிப்பதே அவன் வேலை. இவ்வேலையைச் செய்வதற்காக அவன் மாதம் எட்டு ரூபாய் சம்பளம் பெற்ருன்.

இச்சிறு தொகையை அவன் சிக்கனமாகச் செலவு செய்தான்; கையில் நூறு ரூபாய் சேர்ந்ததும், ஒரு கடையை வாடகைக்குப்பேசி, அங்கே தேங்காய் வியாபாரம் செய்யத் தொடங்கினுன்.

இராமசாமி ஊக்கமாக உழைத்தான்; ஒழுங்காக வியாபாரம் செய்தான்; அதிகமாகப் பொருள் சம்பாதித்தான்; தென்னந்தோப்புகளை விலைக்கு வாங்கினுன்; வீடுகளைக் கட்டினுன்.

இப்பொழுது இராமசாமி ஒரு முதலாளியாய் விளங்குகிருன். அவன் ஓர் அழகான பங்களாவில் வசிக்கிருன்; இன்பமாய் வாழ்கிருன்; ஏழைகளுக்கும் பல நன்மைகளைச் செய்கிருன். அவன் ஒரு தருமப் பள்ளிக்கூடமும் நடத்தி வருகிருன்.

இராமசாமி மட்டை உரித்துக்கொண்டு இருந்தகாலத்தில் அவனை எல்லோரும் 'மட்டை இராமசாமி' என்று வழங்கினர்; பின்பு அவனைத் 'தேங்காய்க்கடை இராமசாமி' என்றனர். இப்பொழுது அவன்பெரிய பணக்காரனுகிவிட்டபடியால், அவன் பெயரைச் சொல்லவும் எல்லாரும் கூசுகின்றனர். அவனை இப்பொழுது எல்லாரும் 'முதலாளி' என்றே வழங்குகின்றனர்.

'மட்டை இராமசாமி'யை முதலாளி ஆக்கியது எது? அவனுடைய பணம் அல்லவா? பணத்திற்கு எவ்வளவு வல்லமை இருக்கிறது பாருங்கள்! ஆகையால், நீங்களும் பணத்தைத் தேடிப் பெருமை அடையுங்கள்.



6. வீர சிங்கன்

முன் காலத்தில் வீர சிங்கன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் ஒரு சிறந்த போர் வீரன்; அனேக அரசர்களுடன் போர் புரிந்து அவர்களையெல்லாம் வென்றான். தோல்வியடைந்த அரசர்கள் அவனுக்குக் கப்பங்கட்டினார்கள்.

ஆனால், வீர சிங்கன் சிறிதும் ஈவு இரக்கமில்லாதவன். எதிர்த்தோரை அவன் இலகுவில் விடமாட்டான். தண்டிப்பதைத் தவிர மன்னிப்பதே அவன் வழக்கமில்லை. ஆகையால், அவனுடைய பகைவர்கள் அவனைக் கண்டு நடுநடுங்கினார்கள். அவன் கையில் அகப்படுவதைக்காட்டி

லும் இறப்பதே நலம் என அவர்கள் நினைத்தார்கள்.

அவன் மனம் மிகவும் கொடியது. அவனுடைய முகம் மிக விகாரமாயிருந்தது. அவ்விஷயம் அவனுக்கு நெடுநாள் தெரியாது.

ஒரு நாள் அவன் தன் முகத்தைக் கண்ணுடியில் பார்த்தான்; தன் விகாரமான முகத்தைக் கண்டு தானே வெறுப்படைந்தான். அவன் கண்களிலிருந்து நீர் ததும்பியது. மறு கணமே அவன் அழத் தொடங்கினுன்.

அவன் பக்கத்தில் அவனுடைய விதூஷகன் உட்கார்ந்திருந்தான். வேடிக்கையாகப் பேசி அரசனைச் சந்தோஷப்படுத்துவது அவனது கடமை. அவன் வெகு சமர்த்தன். அரசனையும் சில சமயங்களில் அவன் பரிகசிப்பான். ஆனுல், அவன்மீது அரசன் கோபித்துக்கொள்ளமாட்டான்.

அரசன் அழவே, அவனும் அழ ஆரம்பித்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் அரசன் அழுவதை நிறுத்திவிட்டான். ஆனுல், விதூஷகன் ஓயாமல் அழுதான். அவன் அழுவதை நிறுத்துவதாகவும் தோன்றவில்லை.

அரசன், "ஏனப்பா, ஓயாமல் அழுகிருய்? காரணத்தைச் சொல்," என்ருன்.

விதூஷகன், "அரசரே, நீங்கள் ஒரு முறை உங்கள் விகாரமான முகத்தைப் பார்த்தீர்கள். அதற்கு நீங்கள் இவ்வளவு நேரம் அழுதீர்கள். ஆனால், நானோ, அம்முகத்தை எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். உங்களைக்காட்டிலும் நான் அதிகமாக அழ வேண்டுவது நியாயந்தானே!" என்றான்.

அரசன் அவன்மீது கோபித்துக்கொள்ளவில்லை; அவனது புத்திக் கூர்மையை மெச்சினான்; அவனுக்குச் சம்பளத்தையும் உயர்த்தினான்.

---

7. தேகப்பயிற்சியின் வெற்றி

காலை ஐந்து மணிக்குப் பழுத்த கிழவன் ஒருவன் தன் வீட்டை விட்டு வெளியே கிளம்பினான். அவன் கையில் ஒரு மண் வெட்டி இருந்தது.

கிழவன் ஐந்து அடி உயரம் உள்ளவன். அவன் மார்பு அகன்று இருந்தது. அவன் உடல் கல்லைப்போல உறுதியாய் இருந்தது. அவனுக்குச் சுமார் தொண்ணூறு வயது இருக்கும். ஆனால், அவன் முப்பது வயது வாலிபனைப் போலக் காணப்பட்டான்.

அந்தக் கிழவன் வெகு விரைவாய் நடந்தான்; சிறிது நேரத்திற்குள் தன் வயலுக்கு வந்தான்.

உடனே அவன் மண் வெட்டத் தொடங்கினன். வேர்வை, அவன் உடலிலிருந்து ஆருய்ப் பெருகி ஓடிற்று.

சிறிது நேரத்திற்குப் பிறகு, ஒரு வாலிபன் அங்கே வந்தான். அவன் கழுத்து முதல் கால் வரையில் தன்னை ஆடையால் மூடிக்கொண்டிருந்தான்.



அவன் கிழவனைப் பார்த்து, "தாத்தா, உமக்குக் குளிரவில்லையா? வீட்டில் நீர் சுகமாய் இருக்கலாமே! ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறீர்?" என்று கேட்டான்.

அந்தக் கிழவன், வயிறு குலுங்கச் சிரித்தான்; பின்பு, "குழந்தாய், உன்மீது குற்றம் இல்லை. நீ தெரியாமல் பேசுகிருய். மண்

வெட்டுவதில் உள்ள சுகம் வீட்டில் இருப்பதில் இல்லை. அது உனக்குத் தெரியாது.

"நான் எண்பது வருஷங்களாக மண்வெட்டி வருகிறேன். இது வரையில் எனக்கு ஒரு நோயும் வந்ததில்லை. நான் என் கண்களால் இன்றும் எதையும் கூர்ந்து பார்க்கின்றேன். என் காதுகளும் நன்றாய்க் கேட்கின்றன. என் பற்களைப் பார்! அவை மிகவும் வெண்மை யாயும் உறுதியாயும் இருக்கின்றன. வயதான வர்கள் பற்களை இழந்துவிடுகின்றார்கள். ஆனால், இன்னும் எனக்கு ஒரு பல்கூட விழவில்லை. இன்னும் எந்த வாலிபனாலும் என்னுடன் ஓட முடியாது. என்னை வெயிலும், மழையும், பனியும் ஒன்றும் செய்யமாட்டா. இதற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன்; கேள் :

"நான் ஒவ்வொரு நாளும் தேகப்பயிற்சி செய்கிறேன். மண்வெட்டுவதை நான் என்றும் மறப்பது இல்லை. நீ தேகப்பயிற்சி செய்வதில்லை. அதனாலேதான் நீ இவ்விதம் குளிருக்கு அஞ்சிப் போர்த்திக்கொண்டிருக்கிறாய். இன்று முதல் நீயும் தேகப்பயிற்சி செய். அப்பொழுதுதான் நீ இன்பமாக வாழலாம். அல்லாவிட்டால், வயது முதிர்ந்த காலத்தில் நீ கஷ்டப்படுவாய்," என்று சொன்னான்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - FEB 1942

8. சோம்பலின் கெடுதி

ஆற்றூர் என்னும் ஊரில், அரங்கசாமி என்னும் ஒரு பையன் இருந்தான். அவன் பெரிய சோம்பேறி; தன் பாடங்களைச் சரியாய்ப் படிக்க மாட்டான்; பள்ளிக்கூடத்திற்கும் ஒழுங்காய்ப் போகமாட்டான். வம்புபேசிக் காலம் கழிப்பதில் அவனுக்கு மிகுந்த விருப்பம் உண்டு.

ஒரு நாள் அவனுக்குப் பொழுது போகவில்லை. ஒரு யோசனையும் இல்லாமல் அவன் வெளியே புறப்பட்டான். சிறிது நேரத்திற்குள் அவன் சகாதேவன் என்னும் ஒரு மாணவன் வீட்டில் நுழைந்தான்.

சகாதேவன் அறிவுள்ள பையன். அவன், தன் வேலையிலேயே எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருப்பான். வம்பு பேச அவனுக்குச் சிறிதும் நேரம் கிடையாது. அவனிடம் சென்ற அரங்கசாமி, அவனுடன் பல வீண் பேச்சுக்களைப் பேசத் தொடங்கினான்.

அப்பொழுது சகாதேவன், தன் இருப்பிடத்தை விட்டு எழுந்திருந்து, "போதும், அரங்கசாமி, பேச்சை நிறுத்திக்கொள். நான் வம்பு பேசத் தயாராய் இல்லை. அதற்கு எனக்குச் சிறிதும் நேரமில்லை. நான் உன்னைப்

போன்ற சோம்பேறியும் அல்ல. காலத்தை வீணுகக் கழிக்க என்னுல் முடியாது. இனி உனக்கு ஏதாவது வேலையிருந்தால் என்னிடம் வா; வீணே இங்கு வந்து என்னைத் துன்பப் படுத்தாதே. உனக்குக் கோடி வந்தனம்,'' என்று சொல்லித் தன் அறையை விட்டு வீட்டிற்குள் சென்முன்.

அரங்கசாமி மிகவும் வெட்கமடைந்தான்; உடனே அவ்வீட்டைவிட்டு வெளியே வந்தான். ஆனுல், இன்னது செய்வதென்பது அவனுக்குத் தோன்றவில்லை. அவ்வூரின் பெரிய கடை வீதி வழியாக அவன் சென்முன். ஒவ்வொரு கடையருகிலும் நின்று நின்று அங்கிருக்கும் சாமான்களைப் பார்த்துக்கொண்டே சென்முன்.

இவ்விதம் மெள்ள மெள்ள நடந்துகொண்டே அவன் ஒரு பெரிய கடைக்கெதிரில் வந்து சேர்ந்தான். அங்குப் பல புதிய பொருள்கள் கண்ணுடிப் பீரோவில் வரிசை வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன. வாயைத் திறந்த வண்ணம் அவைகளைப் பார்த்துக்கொண்டு, ஒரு பீரோவின் முன் அவன் நின்முன்.

அப்பொழுது அக்கடைக் காவல்காரன் அவனைப் பார்த்து வெகு கோபத்துடன், "ஏ, சின்னப் பயலே, உனக்கு இங்கு என்ன வேலை?

சாமான்களைத் திருட வழி பார்க்கிருயா? உன் சாமர்த்தியம் இங்குச் செல்லாது. இவ்விடத்தை விட்டு உடனே செல். நீ இனி இங்கு வந்தால், உன் கண்ணைப் பிடுங்கிவிடுவேன். ஜாக்கிரதை!" என்ருன்.

வெகு கவலையுடன் அரங்கசாமி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்; மெள்ள மெள்ள நடந்து, இரயில்வே ஸ்டேஷன் வந்து சேர்ந்தான்; ஸ்டேஷனுக்குள் நுழைந்து, அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தான்.

அச்சமயம் ஒரு திசையிலிருந்து இரயில் வண்டி வந்து நின்றது. டிக்கட்டுப் பரிசோதகர் ஒருவர், அவனிடம் வந்து, "டிக்கட்டு எங்கே?" என்று கேட்டார். "ஐயா, நான் இரயிலில் பிரயாணம் செய்யவில்லை; சும்மா இங்கு வந்தேன். ஆகையால், என்னிடம் பிரயாணச் சீட்டு இல்லை," என்ருன் அரங்கசாமி.

அவன் சொன்ன வார்த்தைகளை நம்பாத டிக்கட்டுப் பரிசோதகர், அவனைக் கன்னத்தில் இரண்டறை அறைந்து வெளியே கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டார்.

அரங்கசாமிக்கு அப்பொழுதுதான் புத்தி வந்தது. "ஆஹா! நான் சோம்பேறியாயிருப்பதாலல்லவோ என்னை எல்லாரும் ஏளனம்

செய்கின்றனர் ! என் நண்பன் என்னை அவமதித்தான். கடைக்காரன் எனக்குத் திருட்டுப் பட்டம் கட்டினான். டிக்கட்டுப் பரிசோதகரும் என்னை அவமதித்தார். சோம்பல் மிகவும் தீயது. அது மானத்தைப் போக்கிவிடும். இனிச் சோம்பலை அடியுடன் விட்டுவிட வேண்டும்,'' என்று அவன் தீர்மானம் செய்துகொண்டான். அன்று முதலே அவன் மாறுதல் அடைந்தான். அதனால், அவனை எல்லாரும் மெச்சினர்.

---

9. நல்ல செலவுகள்

ஒரு நாள் உபாத்தியாயர் ஒருவர், தம் மாணவர்களைப் பார்த்து, “ மாணவர்களே, இன்று உங்களை நான் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். அதற்கு நீங்கள் தகுதியான விடை சொல்ல வேண்டும்; ஆலோசியாமல் பதில் சொல்லலாகாது. உங்களிடம் அளவுக்கு மிஞ்சிய செல்வம் இருந்தால், நீங்கள் அதை எவ்விதம் செலவு செய்வீர்கள் ? இதுவே நான் உங்களைக் கேட்க விரும்பிய கேள்வி,'' என்றார்.

விசுவநாதன் என்னும் மாணவன், “ ஐயா, நான் அப்பெருஞ்செல்வத்தை என் தந்தையாரிடம் கொடுப்பேன் ; ‘தந்தையாரே, உங்கள் அருளாலேதான் இப்பெருஞ்செல்வத்தை நான்

பெற்றேன். உங்கள் மனம்போல இதைச் செலவு செய்யுங்கள்,' என்று அவரிடம் சொல்லு வேன்,'' என்றான்.

மாணிக்கம் என்பவன், "நான் அந்தச் செல் வத்தைக்கொண்டு என் சுற்றத்தார்களையும் நண் பர்களையும் நன்கு ஆதரிப்பேன்; பல இடங்களி லிருந்து கற்றோர்களை வரவழைப்பேன்; அவர் களுக்கு வேண்டும் பொருள்களைக் கொடுப் பேன்,'' என்றான்.

கந்தசாமி என்பவன், "நான் அச்செல் வத்தைக்கொண்டு பல கலாசாலைகளைக் கட்டு வேன்; நூற்றுக்கணக்கான சிறுவர்களை அங்கே கல்வி கற்கச் செய்வேன்; அவர்களுக்கெல்லாம் உணவும் உடையும் தருவேன்; நாட்டில் உள்ள அறியாமையை நீக்க, இயன்ற அளவு பல துறையிலும் முயற்சி செய்வேன்,'' என்றான்.

வேலன் என்பவன், "நான் அப்பொரு ளின் உதவியால் ஏழைகளின் நன்மைக்காகப் பல கிணறுகளை வெட்டுவேன்; சாலைகளை அமைப்பேன்; ஏழைகளுக்கு வட்டியில்லாமல் கடன் கொடுப்பேன்; பல தரும வைத்திய சாலை களை அமைப்பேன்; உழைத்து உண்ண முடி யாத அநாதைகளுக்குச் சத்திரம் கட்டி அன் னம் அளிப்பேன்,'' என்றான்.

இரத்தினம் என்பவன், "ஐயா, நான் நம் நாட்டில் உள்ள கைத்தொழிலேயும், வியாபாரத் தையும் விருத்தி செய்வதில் அச்செல்வத்தைச் செலவு செய்வேன்," என்றான்.

கனகசபை என்பவன், "ஐயா, நான் வேலே செய்து பிழைக்க முடியாத கூனர், குருடர், நொண்டிகள் முதலியவர்களுக்கு உதவி செய் வேன். இன்னும் அனேக தேகப்பயிற்சிப் பள்ளி களும், வாசக சாலேகளும் அமைப்பேன்," என்றான்.

இவைகளே எல்லாம் கேட்ட உபாத்தியாயர், "மாணவர்களே, நீங்கள் கூறிய வழிகள் மிக வும் நல்லவை. அவைகளிலேயே பணத்தைச் செலவு செய்ய வேண்டும். அதுவே நன்மை பயக்கும். நீங்கள் பணம் சம்பாதித்த போது, இப்பொழுது சொன்னவற்றைச் செய்ய மறந்து விடாதீர்கள்," என்றார்.

---

10. சாலமன்

பல ஆண்டுகளுக்கு முன், சாலமன் என்னும் அரசர் ஒருவர் இருந்தார். அவர் மிக்க அறி வாளர்; எக்காரியத்தையும் ஆலோசித்தே செய் வார். அவரை எவராலும் ஏமாற்ற முடியாது. உண்மையை அறிவதில் அவர் நிபுணர். அவ

ரது அறிவின் மேன்மையை விளக்கப் பல கதைகள் உண்டு. அவைகளில் ஒன்றை இங்கே கூறுவோம்:

அக்காலத்தில் ஒரே வீட்டில் இரண்டு பெண்கள் வசித்து வந்தார்கள். அவர்களில் ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொரு குழந்தை இருந்தது. இரண்டு குழந்தைகளும் சம வயதுள்ளவை.

அவ்விரண்டு பெண்களில் ஒருத்தி மிகவும் நல்லவள். மற்ருெருத்தி பொல்லாதவள்; பொருமையுடையவள்; பிறர் வாழப்பொருதவள்.

அவள் குழந்தை ஒரு நாள் திடீரென்று இறந்துவிட்டது. தன் குழந்தை இறந்ததை எண்ணி அவள் மிகவும் துக்கப்பட்டாள். மற்றவள் குழந்தை சுகமாயிருப்பதைக் கண்டு அவள் வயிறெரிந்தாள்.

தன்னைப்போலவே மற்றவளும் துக்கப்பட வேண்டுமென அவள் எண்ணினுள். அதற்காக அவள் ஒரு தந்திரம் செய்தாள்: இறந்த தன் குழந்தையை மற்றவள் அறையில் போட்டுவிட்டு, உயிருடன் இருந்த அவள் குழந்தையைத் தான் எடுத்துக்கொண்டாள்.

இவ்விஷயம் குழந்தையின் தாய்க்குத் தெரிந்தது. அவள், "என் குழந்தையைக் கொடு," என்ருள். தீயவளோ, "என் குழந்தைதான் இது;

நான் இதைத் தரமாட்டேன்," என்று சொல்லி விட்டாள்.



இவ்வழக்குச் சாலமனிடம் விசாரணைக்கு வந்தது. ஒருவரும் சாட்சி இல்லை. அதனால், குழந்தை இன்னாருடையதுதான் என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. ஆனால், உண்மையை அறிய விரும்பிய சாலமன், ஒரு தந்திரம் செய்தார்: அவர் ஒரு கொலையாளியை அழைத்து, "இக்குழந்தையை இரண்டாக வெட்டி, ஆளுக்கொரு பாதியாகக் கொடு," என்றார்.

இதைக்கேட்ட கொடியவள், "அதுவே சரி; அதுதான் சரியான தீர்ப்பு!" என்றாள். ஆனால்,

பெற்ற தாயின் மனம் துடித்தது. அவள், "அரசரே, பொறுங்கள். குழந்தையைக் கொல்ல வேண்டா. அவளே அக்குழந்தையை எடுத்துக் கொள்ளட்டும். எங்காவது என் குழந்தை உயிருடன் இருந்தால் போதும்!" என்றாள்.

இப்பொழுது உண்மை விளங்கிவிட்டதல்லவா? உடனே சாலமன், பெற்ற தாயிடம் குழந்தையைக் கொடுத்தார்; குழந்தையைக் கொல்லச் சம்மதித்தவள் அதன் தாயல்ல என்பதை அறிந்தார். அவளை அவர் தக்கபடி தண்டித்தார்; நல்லவளுக்கு வேண்டிய பரிசுகளைக் கொடுத்தனுப்பினார்.

---

11. நீதி மன்னர்

அளகாபுரி என்பது ஒரு நாடு. பல வருஷங்களுக்கு முன் அதை அளகேசர் என்னும் ஓர் அரசர் ஆண்டார். அவர் மிகவும் நல்லவர்; குடிகளிடத்தில் அன்பு உள்ளவர். அவர் குடிகளுக்கு நன்மை செய்வதில் எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருந்தார். அதனால், குடிகள் அவரை 'நீதி மன்னர்' என்று கொண்டாடினார்கள். அவர்கள் பசியும் கள்வர் பயமும் இன்றி இனிது வாழ்ந்தார்கள்.

அம்மன்னருக்கு ஒரு மைந்தர் இருந்தார். தந்தையாரின் அரிய குணங்களில் ஒன்ருவது அவரிடம் இல்லை. அவருக்குத் திடீரென்று கோபம் வரும். அப்பொழுது அவர் சிறிதும் யோசியாமல் எந்தக் காரியத்தையும் செய்துவிடுவார்; பின்பு அதை உணர்ந்து வருந்துவார்.

ஒரு நாள், தம் வேலையாட்களில் ஒருவன் மீது அவர் கோபம் கொண்டார். பக்கத்தில் இரும்புப் பூண் இட்ட ஒரு கம்பு கிடந்தது. அதைத் தாவி எடுத்து, வேலைக்காரன் தலையில் நாலடி அடித்தார். அக்கணமே வேலைக்காரன் ஆவி துறந்தான். இளவரசர் திடுக்கிட்டுப் போனுர்; தாம் செய்த குற்றத்தை நினைத்து மிக வருந்தினுர்.

அளகேசர் இவ்விஷயத்தை அறிந்தார். அப்பொழுது அவர் அடைந்த துக்கத்திற்கு அளவில்லை. "ஐயோ! இக்கொலைபாதகனு என் மகன்! எனக்குப் பின் இந்நாட்டை இவனு ஆளக்கூடியவன்! அரசனுக்குக் கோபம் வரலாமா? கோபத்திற்கும் ஓர் அளவில்லையா? இவன் கோபத்தால் ஓர் ஏழை அநியாயமாய் மாண்டுபோனுனே! அவன் தாயும் மனைவி மக்களும் எவ்வாறு வருந்துவார்களோ! என் மகனுல் இந்நாட்டிற்குத் தீமையே விளையும். இவன்

இருப்பதிலும் இறப்பதே நலம்,'' என்று வருந்தினர்.

பின்பு அளகேசர் மாண்டுபோன வேலைக்காரன் மனைவியை வரவழைத்தார். அவளைப் பார்த்து நடந்ததைக்கூறி "அம்மா, நீ கவலைப் படாதே. வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டது. வருந்துவதால் பயன் என்ன? உன்னையும் உன் மக்களையும் நானே காப்பாற்றுகிறேன்,'' என்று ஆறுதல் கூறினர்.

பிறகு அவர் தம் அமைச்சரை அழைத்து, "அமைச்சரே, என் மகன் கொலை செய்துவிட்டான். அவனுக்கு மரண தண்டனை விதித்திருக்கிறேன். அவனை உடனே தூக்கிலிட்டுக் கொல்லுங்கள். என் மகன் என்று நினைக்காதிர்கள். நீதி பெரிது. அது எவர்க்கும் பெரிது. அரசனும், ஆண்டியும் அதற்கு உட்பட்டவர்களே. ஆகையால், என் மகன் என்று யோசிக்காமல், தாமதமின்றி அவனை உடனே தண்டிக்க வேண்டும்,'' என்று கூறினர்.

பலர் அரசரை அணுகி, இளவரசருக்காகப் பரிந்து பேசினர். இலகுவான தண்டனை விதிப்பதே போதுமென்று சிலர் கூறினர். அரசர் மனைவியார் அவரை வணங்கி, "நாதரே,

உங்களுக்கு மைந்தன் ஒருவன்தானே! அவன் மீது சிறிது இரக்கம் கொள்ளலாகாதா? வேண்டுமானல், அவனே வேறு எந்த நாட்டிற்காவது ஓட்டிவிடுங்கள். கண் காணுத இடத்திலாவது அவன் பிழைத்திருக்கட்டும். அவனைக் கொல்ல வேண்டா," என்று வேண்டிக்கொண்டார்.

அரசர், "உன் மகன் எனக்கும் மைந்தனல்லவா? அவன்மீது காற்றடிக்கவும் நான் சம்மதிப்பேனு? ஆனல், என்ன செய்வது! தங்க ஊசி என்ருல் அதனல் கண்ணைக் குத்திக் கொள்ளலாமா? அவன் செய்தது பெருங்குற்றமல்லவா? அவனே மன்னித்தல் நீதியாகுமா? அப்படிச் செய்தால், நம்மைப் பிறர் மதிப்பாரா? ஆகையால், அவன் இறக்க வேண்டுவது மிகவும் அவசியமே. அவனுக்காக நீ இனி என்னுடன் பரிந்து பேசாதே. என் தீர்மானத்தை நான் மாற்ற மாட்டேன்," என்று கூறினர்.

இளவரசரும் அன்று மாலை தூக்கிலிடப்பட்டார். அவ்வூர் ஜனங்கள் அரசரின் நீதி தவருத நேர்மையைப் புகழ்ந்து பேசினர்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - FEB 1942

12. குரு பக்தி

ஓர் ஊரில் சேதுராமர் என்றொருவர் செல்வர் இருந்தார். அவர் மாணவராய் இருக்கும்பொழுதும், குருவினிடத்தில் மிகவும் வணக்கமுள்ளவர். குருவின் மனம் கோணும்படி அவர் ஒரு பொழுதும் நடந்ததில்லை. அவர் வார்த்தைக்கு என்றும் எதிர் வார்த்தை பேசியதும் இல்லை.

கல்வி கற்று முடிந்ததும், அவர் வேறு ஓர் ஊருக்குச் சென்றார். அங்கேயே அவர் மணம் செய்துகொண்டு வசிக்கலாயினர்; பல தொழில்களைச் செய்து விரைவில் மிகுந்த செல்வத்தையும் திரட்டினர். அவ்வூரில் அவர் பெரிய செல்வாக்குள்ளவராய்ப் புகழுடன் வசித்து வந்தார்.

ஒரு நாள் அவர் மோட்டார் ஏறிக் கடை வீதியில் சென்றார். அப்பொழுது சிறிது தூரத்தில் ஒரு கிழவர் கோலை ஊன்றி மெல்ல மெல்லப் போவதைப் பார்த்தார்; மோட்டாரை நிறுத்திக் கிழவரைச் சிறிது நேரம் உற்று நோக்கினர்; அவரே தமக்கு இளமையில் கல்வி கற்பித்த ஆசிரியர் என்பதை அறிந்தார்.

அவர் மோட்டாரிலிருந்து இறங்கி அக் கிழவரிடம் சென்றார். பல நாளைப் பிரிவினால் அக்கிழவர் அவரை அறிந்துகொள்ளவில்லை. அவர் கிழவரிடம் வெகு பணிவுடன் தாம் இன்னா

ரென்பதைத் தெரிவித்தார்; பின்பு அவரைத் தம் காரில் ஏற்றிக்கொண்டு தம் இல்லத்திற்குச் சென்ரூர். அவரும், அவர் மனைவி மக்களும் கிழவருக்குப் பல பணிவிடைகளைச் செய்தார்கள்.

அன்று மாலை அவர் தம் குருவைப் பார்த்து, "ஐயா, உங்களைப் பார்க்க நேர்ந்ததை நான் என் பெரும்பாக்கியமாகக் கருதுகிறேன். நீங்கள் இங்கு வந்த காரியம் என்னவோ! அதை நான் அறிய விரும்புகிறேன்," என்ரூர்.

அப்பெரியவர், "சேதுராமா, என் மகளுக்கு மணம் செய்யும் காலம் வந்துவிட்டது. நல்ல மணமகன் ஒருவன் இவ்வூரில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவன் பெற்ரூேர்களைக் கண்டு பேச இங்கு வந்தேன்," என்று கூறி, அவர்கள் விலாசத்தையும் தெரிவித்தார்.

உடனே சேதுராமர் மணமகனின் தந்தையாரை வரவழைத்தார்; தாமே அவருடன் எல்லா விஷயங்களையும் பேசி, கலியாணத்தையும் நிச்சயம் செய்தார்; பின்பு கலியாணத்தையும் தமது சொந்தச் செலவிலேயே வெகு சிறப்பாக நடத்தி வைத்தார்; தம் குருவிற்கும் இன்னும் பல உதவிகளையும் செய்தார். அவர் குரு பக்தி மிகவும் வியக்கத் தக்கதல்லவா!

13. துறவியாரும் துஷ்டனும்

பல வருஷங்களுக்கு முன், ஒரு துறவியார் இருந்தார். ஒரு நாள் அவர் ஒரு காட்டின் வழியே சென்ருர். அப்பொழுது சிலர், "ஐயா, இந்தக் காட்டில் ஒரு துஷ்டன் வசிக்கிருன். அவன் சிறிதும் இரக்கம் இல்லாதவன். கண்ணில் கண்டவர்களை அவன் கொல்லாமல் விடான். அவன் அற்பன். உங்கள் பெருமையை அவன் அறியமாட்டான். ஆகையால், உங்களுக்கும் அவன் தீங்கு செய்வான். நீங்கள் இந்த வழியே செல்ல வேண்டா," என்று சொன்ஞர்கள்.

அவர், "நண்பர்களே, தீயோனை நாம் வெறுக்கலாகாது. அவனும் நம் சகோதரனே. அவனை நல்லவன் ஆக்க வேண்டுவது நம் கடமை ஆகும். அன்பால் மண்ணையும் பொன் ஆக்கலாம். நான் அவனை இன்றே பார்க்கிறேன்," என்று சொன்ஞர்.

பின்பு அவர் அந்தத் துஷ்டன் வசிக்கும் இடம் நோக்கிச் சென்ருர்; சிறிது நேரத்தில் அவன் வசிக்கும் குடிசையை அடைந்தார். அவரைக் கண்ட அந்தக் கொடியவன் சினம்கொண்டு எழுந்தான். "இதோ! உன் தலையைப் பிளக்கிறேன், பார்!" என்று சொல்லிப் பக்கத்தில் உள்ள கோடரியைத் தூக்கிஞன்.

துறவியார் சிறிதும் அஞ்சவில்லை. அவர் அவனைப் பார்த்து, "அப்பா, ஏன் கோபித்துக் கொள்ளுகிறாய்? நான் உன் நண்பன்; உனக்கு



நன்மை செய்யவே உன் இடம் வந்தேன். நான் சொல்லுவதைக் கேள்: அன்பு உடையவனே மனிதன். அன்பு இல்லாதவன் மிருகம். அன்பு உடையவன் புகழ் அடைகிறான்; பெருமை பெறுகிறான். நான் உன்னை நேசிக்கிறேன். வேண்டுமானால், நீ எனக்குத் தீமை செய். அப்பொழுதும் நான் உன்னை நேசிப்பேன். நீ இதுவரையில் கொடிய துஷ்டனாய் இருந்தாய்; பலருக்குத் தீங்கு விளைத்தாய். உன்னால் பல குடிகள் கெட்டன. அதனால், நீ அடைந்த பலன் யாது? நீயே சிந்தித்துப் பார்.

"நீயோ, வல்லமை உள்ளவன். உன்னுல் பிறர்க்குப் பல நன்மைகள் செய்யக்கூடும். அங்ஙனம் செய்தால், உன்னை எல்லாரும் வாழ்த்துவார். நீயும் மகிழ்ச்சியடைவாய். பலகுடும்பங்கள் உன்னுல் முன்னேற்றம் அடையும்," என்றுர்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அக்கொடியவன், தன் குற்றத்தை உணர்ந்தான். அவனிடம் ஒரு மாறுதல் காணப்பட்டது. துறவியின் காலில் விழுந்து, அத்துஷ்டன் அவர் சீடனுனன்.

---

14. நல்ல மாணுக்கன்

கிருஷ்ண புரி என்னும் பட்டணத்தில் ஓர் உயர்தரக் கலாசாலையிருந்தது. அதில் நாராயணன் என்னும் மாணுக்கன் பத்தாவது வகுப்பில் கல்வி பயின்று வந்தான். மற்ற மாணவர்களும் ஆசிரியர்களும் அவனிடம் மிக்க அன்புடையவர்களாயிருந்தார்கள். அவனைப்பற்றிச் சிறிது சொல்லுகிறேன் ; கேளுங்கள்:

இளமை முதற்கொண்டே, நாராயணன் ஒழுங்கான முறைகளை அனுசரித்து வந்தான். சோம்பலென்பது அவனிடம் சிறிதும் இல்லை. எந்தக் கஷ்டமான வேலையையும் அவன் ஊக்கத்துடன் செய்வான் ; செய்ய வேண்டிய வேலைகளை

உடனுக்குடன் செய்வான். வேலையைத்தான் அவன் முதலில் கவனிப்பான்; அதன் பிறகு தான் உண்ணுவான்; உறங்குவான்.

தினசரி செய்ய வேண்டிய ஒவ்வொரு வேலைக்கும் அவன் ஒரு நேரம் குறிப்பிட்டிருப்பான்; அந்த நேரத்திலேதான் அந்த வேலையைச் செய்



வான். குறித்த நேரத்திலேதான் அவன் உண்ணுவான். வேறு நேரத்தில் அமிர்தத்தைக் கொடுத்தாலும் அதை அவன் கண்ணுல் பார்க்கவும் மாட்டான்.

நாராயணன் எல்லாருடனும் பழகமாட்டான்; தீயோரையும், சோம்பேறிகளையும்

வெறுப்பான் ; தனக்கு மேலானவர்களுடன்தான் பழகுவான் ; தன் வேலையைத்தான் கவனிப்பான் ; பிறர் விஷயங்களில் தலையிடவேமாட்டான்.

நாராயணன் எல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசுவான் ; எப்பொழுதும் சிரித்த முகமுடையவனாகவே இருப்பான் ; பெரியோர் இடும் வேலைகளையெல்லாம் உடனே செய்வான்.

மிகுந்த கஷ்டங்களையும் அவன் பொறுத்துக் கொள்ளுவான் ; கஷ்ட காலங்களில் சிறிதும் கவலைப்படமாட்டான் ; பிறர் உதவியையும் நாடமாட்டான் ; தாங்க முடியாத நோயையும் பொறுத்துக் கொள்ளுவான்.

நாராயணன், நேரத்தைச் சிறிதும் வீண் போக்கமாட்டான். ஒரு நாள் அவன் நண்பனான நல்லையன் என்பவன், அவன் வீட்டிற்கு வந்தான்; பள்ளிக்கூடத்திற்குப் போக நாராயணனைக் கூப்பிட்டான்.

நாராயணன், "என்ன! நல்லையா, இப்பொழுது மணி ஒன்பதுதானே ஆகிறது! பத்து மணிக்கல்லவோ பள்ளிக்கூடம் தொடங்குகிறது ! தொடங்குவதற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன் பள்ளிக்குப் போனால் போதாதா ? இவ்வளவு சீக்கிரமே போய் நாம் அங்கு என்ன செய்வது? நம் பாடங்களை அங்கே படிக்க முடியுமா? அங்கே கூடியிருக்

கும் மாணவர்கள் நம்மை அங்ஙனம் செய்ய விடுவார்களா? அவர்களுடன் நாமும் வீண் பேச்சுக்கள் அல்லவோ பேச நேரும்! சில சமயங்களில் சண்டைகள் போடவும் நேருமே! ஆகையால், பள்ளிக்கூடம் தொடங்குவதற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன் பள்ளிக்குப் போனால் போதும்," என்றான்.

மாணவர்களே, அம்மாணவனுடைய வழிகளை நீங்களும் பின் பற்றுங்கள்.

நாராயணனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். அப்பொழுது அவன் ஒரு நாட்டிற்கு அமைச்சனானான். ஏழைகள் அவனை எளிதில் காணலாம். அவர்கள் தங்கள் குறைகளை இவனிடம் கூறினார்கள். இவன் அவர்களுக்கு நன்மைகள் செய்தான்.

---

15. குடிகாரக் குப்பன்

கோட்டையூரில் குப்பன் என்றொரு குடியானவன் இருந்தான். அவன் தீயோர் இணக்கத்தால் கள் குடிக்கப் பழகினான். இடைவிடாது எப்பொழுதும் குடித்து வந்தபடியால், அவனை எல்லாரும் 'குடிகாரக் குப்பன்' என்று ஏளனம் செய்வது உண்டு. குடிகாரனுக்கு மானமேது, வெட்கமேது! மற்றவர்கள் செய்த பரிகாசங்களை எல்லாம் அவன் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

குடியின் மிகுதியால் அவன் சில சமயம் தெருக்களில் விழுந்து புரளுவதுண்டு ; நடு வீதிகளில் நின்று வாய்க்கு வந்தபடியெல்லாம் பிறரைத் திட்டுவதுமுண்டு. இம்மட்டுமோ ! சில சமயங்களில் அவன் ஆடிக்கொண்டும், பாடிக்



கொண்டும் பாதைகளில் வெகு உல்லாசமாகப் போவான். இச்செய்கைகளால் அவன் தன் பெருமையை எல்லாம் இழந்துவிட்டான். அவ்வூரில் உள்ள சிறுவர்களும் அவனைக் கண்டால் கை கொட்டிச் சிரிப்பார்கள்.

நாளடைவில் அவன் நோய்வாய்ப்பட்டான். அவன் உடல் மெலிந்தது. சில நாட்களில் அவன் உடலில் நடுக்கம் தோன்றியது. அவன் பேச்சும் தடுமாற்றமடைந்தது. குடியால் அவன் குடல் வெந்துபோய், ஜீரணிக்கும் சக்தியையும் இழந்துவிட்டது. நாளடைவில் உடல், உணவையும் ஏற்றுக்கொள்ள மறுத்தது. அவன் நிலைமை இவ்வாறு மிகவும் பரிதாபத்துக்கிடமானதாயிற்று.

அதன் பிறகாவது அவன் குடியை நிறுத்தினனு! இல்லை. ஆனல், குடியை நிறுத்த வேண்டுமென்று அவன் பல தடவைகளில் உறுதி செய்துகொண்டது மட்டும் உண்டு. அவனுடைய தீர்மானங்களெல்லாம் பயனற்றுப் போயின. எவ்வளவு முயன்றும் அவனல் குடியை நிறுத்த முடியவில்லை. மிகவும் கொடிய பழக்கங்களில் எல்லாம் கொடியது குடியே. அதில் ஒரு முறை பழகினல் பிறகு வேண்டா என்று தள்ளினலும் அது நம்மை விட்டு விலகாது; அட்டையைப்போல ஒட்டிக்கொள்ளும்.

குப்பன் குடிப்பதில் தன் காசையெல்லாம் தொலைத்து, மிகவும் ஏழையாகிவிட்டான். பின்பு அவன் பிச்சை எடுத்துக் குடிப்பதும், தெருக்களில் விழுந்து கிடப்பதுமாய் இருந்தான்.

இப்படியும் சிறிது காலம் கழிந்தது. பின்பு பிச்சை கொடுக்கவும் ஜனங்கள் மறுக்கவே, அவன் திருட ஆரம்பித்தான். அங்ஙனம் செய்து வருகையில் ஒரு நாள் போலீஸ்காரர்கள் அவனைக் கைதி செய்தார்கள்.

பின்பு அவ்வூர் நீதி ஸ்தலத்தில் அவன் மீது வழக்கு நடந்தது. நீதிபதி அவனுக்கு இரண்டு வருஷம் கடுங்காவல் தண்டனை விதித்தார். குப்பன் சிறையில் அடைக்கப்பட்டான். அங்கே அவன் பல கஷ்டங்களை அடைந்தான்.

அப்பொழுது குப்பனுக்குப் புத்தி வந்தது. "இனி நான் குடிப்பதில்லை. அதுவுமன்றி மற்றவர்கள் குடிப்பதையும் வேருடன் களைவதே என் தொழில். அதற்காக நான் ஊர் ஊராகப் பிரயாணம் செய்வேன்; குடியினால் வரும் கேட்டை உலகிற்கு எடுத்து உரைப்பேன்," என்று அவன் தனக்குள் தீர்மானம் செய்துகொண்டான்.

சிறையினின்று வெளி வந்ததும், அவன் அவ்விதமே செய்தான். பலர் அவன் உபதேசங்களைக் கேட்டு முன்னேற்றம் அடைந்தனர். அவன் சீர்திருத்தம் அடைந்ததைக் கண்டு அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

---

16. இயேசுநாதரின் உபதேசங்கள்

1941 வருடங்களுக்கு முன், பெத்தலகேம் என்னும் ஊரில் ஒரு மகான் தோன்றினர். அவரே இயேசு நாதர். அவர் ஏழைக் குடியில் பிறந்தார்; தம் வாழ்நாள் முழுவதையும் பிறர்க்கு நன்மை செய்வதிலேயே கழித்தார். அவர் ஊர் ஊராகச் சென்று பல நீதிகளை ஜனங்களுக்குப் போதித்தார். அவருடைய இனிய வார்த்தை களைக் கேட்க ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வருவார்கள். ஒரு சமயம் அவர் பின் வருமாறு உபதேசம் செய்தார் :

“ கடவுள், நம் எல்லாரையும் படைத்தார். அவரே நம் தந்தையார். நாம் எல்லாரும் சகோ

தரர். ஆகையால், நாம் எல்லாரும் ஒற்றுமையாய் வாழ வேண்டும்; ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்; ஒருவரையும் வெறுக்கலாகாது. கொடிய நோயாளிகளிடத்தும் நாம் அருவருப்புக் கொள்ளலாகாது. அவர்களையும் நாம் நேசிக்க வேண்டும்.

"நாம் கோபம் கொள்ளலாகாது. கோபமே பாபத்துக்கெல்லாம் காரணம். நமக்குத் தீங்கு செய்தவர்களையும் நாம் நேசிக்க வேண்டும். அவர்களை நல்லவர்களாக்கும்படி நாம் கடவுளைத் தொழ வேண்டும்.

"நாம் எவரையும் குறை கூறலாகாது. பிறரைக் குறை கூறுவது கெட்ட வழக்கம். அதனால் கெடுதியே உண்டாகும். 'இவன் நல்லவன்; இவன் கெட்டவன்,' என்பதைக் கண்டறியும் சக்தி கடவுளுக்கே உண்டு.

"தீங்கு செய்தவர்களுக்குத் தீங்கு செய்வது உலக வழக்கமாயிருக்கிறது. அது மிகவும் தவறான காரியம். நாம், நம் விரோதிகளையும் மன்னிக்க வேண்டும். அதுவே நல்ல முறை. ஏனெனில், நாமும் அனேக குற்றங்களைச் செய்கிறோம். அவைகளுக்காகத் தண்டனை அடைய விரும்புகிறோமா? நம்மை மன்னிக்க வேண்டு

மென்று கேட்கிறேமல்லவா? அதே போல நமக்குத் தீங்கு செய்தவரையும் நாம் மன்னிக்க வேண்டும்.

"பெருமைக்காக நாம் எக்காரியத்தையும் செய்யலாகாது. ஏழைகளுக்கு உதவி செய்வது நல்ல காரியம். ஆனால், பிறர் புகழ வேண்டுமென்று எக்காரியத்தையும் செய்யலாகாது. அது தருமமாகாது. புகழை விரும்பிச் செய்யும் தருமத்தைக் கடவுள் விரும்புவதில்லை.

"உண்மையான பக்தியுடன் நாம் கடவுளைத் தொழ வேண்டும்; நாம் கடவுளைத் தொழும் பொழுது, 'எனக்கு இது வேண்டும்; அது வேண்டும்,' என்று கேட்கலாகாது. நம்முடைய தேவைகளை அவர் அறிவார். அவர் எல்லாம் அறிந்தவர். அவர் எப்பொழுதும் நன்மையையே செய்வார். அந்த நம்பிக்கை நம்மிடம் எப்பொழுதும் இருக்க வேண்டும்."

இங்ஙனம் இயேசு நாதர் அனேக உபதேசங்கள் செய்தார். ஜனங்கள் அவைகளைக் கேட்டு நன்மையடைந்தார்கள்.



17. சாரணச் சிறுவன்

இவன் ஒரு சாரணச் சிறுவன். இவன் தெய்வ பக்தியும், ராஜ விசுவாசமும் உள்ளவன்; தான் பிறந்த தேசத்திற்குத் தொண்டு செய்வதில் அதிக ஊக்கம் உடையவன்.

இவன் தன் நாட்டைப்பற்றிய பல நூல் களை அடிக்கடி படிப்பான். தான் கற்ற சிறந்த விஷயங்களை எல்லாம் இவன் பிறருக்கு எடுத்து உரைப்பான்; தன் நாட்டுப் பெரியோர்களின் படங்களைத் தான் படிக்கும் அறையில் மாட்டி வைப்பான்; தன்னைத் தேடிவரும் நண்பர்களுக்கு அப்பெரியார்களின் சரித்திரங்களை எல்லாம் கூறுவான். தன் நாட்டின் பெருமையைப் பற்றிப்

பேசுவதில் இவன் ஒரு பொழுதும் சலிப்பதே இல்லை.

தாய் தந்தையர்களிடத்தில் இவன் மிகவும் வணக்கம் உடையவன். ஆசிரியர்களிடத்திலும் மற்றப் பெரியார்களிடத்திலும் இவன் பணிந்து நடப்பான்; அவர்கள் இட்ட வேலைகளை எல்லாம் மகிழ்ச்சியுடன் செய்வான். இவன், சிறியவர்களிடத்தில் மிகவும் அன்பு உடையவன்; அவர்களுடன் இனிமையாகப் பேசுவான்; குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவான். தெருக்களில் சண்டை இடும் குழந்தைகளை இவன் சமாதானம் செய்து வைப்பான். எவருடனும் இவன் இனிமையாகவே பேசுவான். கோபம் என்பது இவனுக்குச் சிறிதும் உண்டாகாது. இவன் சிரித்த முகம் உடையவன்.

பிறருக்கு உதவி செய்ய இவன் எப்பொழுதும் சித்தமாய் இருப்பான். நோயாளிகளிடத்தில் இவனுக்குச் சிறிதும் வெறுப்புத் தோன்றாது. இவனுக்குச் சிறிது வைத்தியமும் தெரியும். இவன் நோயாளிகளின் புண்களைக் கழுவுவான்; அவர்களுக்கு நோவாமல் மருந்து இடுவான்; அவர்களுடன் இனிய வார்த்தைகளைப் பேசி அவர்களை உற்சாகப்படுத்துவான். பிறருக்கு உதவி செய்வதே இவன் தொழில். அவ்விதம்

செய்வதில் இவன் அளவில்லா மகிழ்ச்சி அடைவது உண்டு.

தீயவர்களுடன் இவன் பழகமாட்டான். ஆனால், அவர்களை இவன் வெறுக்கமாட்டான்; அவர்களுக்கும் கூடுமான உதவிகளைச் செய்வான். இவனுக்குப் பகைவரே இல்லை.

கடினமான வேலைகளையும் இவன் ஊக்கமாகச் செய்வான். குறுக்கிடும் துன்பங்களைக் கண்டு இவன் அஞ்சமாட்டான். எடுத்த காரியத்தை இவன் பொறுமையுடன் செய்து முடிப்பான். அப்பொழுது ஊணையும் உறக்கத்தையும் இவன் ஒரு சிறிதும் கருதமாட்டான். வெயிலுக்கும், மழைக்கும், பனிக்கும், இருளுக்கும் பயந்து இவன் தான் தொட்ட காரியத்தை விட்டுவிடமாட்டான்.

இச்சிறுவன், தேகப்பயிற்சி செய்வதில் மிகவும் ஊக்கம் உள்ளவன். இவன் உடல் எவ்வளவு வன்மையுடையதாய் இருக்கிறது பாருங்கள் ! ஒவ்வொரு நாளும் இவன் பல விளையாட்டுகள் விளையாடுவான். ஒரு பொழுதும் இவன் சும்மா இருக்கமாட்டான். எப்பொழுதும் புதிய புதிய விஷயங்களை இவன் கற்றுக்கொண்டே இருப்பான். அறிவையும் உடலையும் வளர்ப்பதில் இவனுக்கு ஆசை அதிகம்.

ஒரு சமயம் சிறு குழந்தை ஒன்று கிணற்றில் தவறி விழுந்துவிட்டது. உடனே இவன் கிணற்றில் குதித்து, குழந்தையை எடுத்துக் கரை சேர்த்தான். இவ்விதம் இவன் பல நன்மைகளைச் செய்வதுண்டு.

இச்சிறுவன் எவ்வளவு சிறந்த குணம் உள்ளவனாய் இருக்கிறான், பாருங்கள்! இவனைப் போல நாமும் இருக்க வேண்டாவா?

நல்லவனே மேன்மை பெறுவான். அவனே கடவுளுக்குப் பிரியமானவன்.

---

18. நன்றியுள்ள சாரதி

சாரதி என்னும் ஓர் ஏழை இருந்தான். உண்ண உணவின்றி, அவன் பல நாள் பட்டினி கிடப்பதுண்டு. அவனுக்கு உற்றார் உறவினர் இல்லை.

பசியின் கொடுமையால் அவன் ஒரு நாள் தெருவில் நடந்துசெல்லுகையில், கீழே விழுந்து மூர்ச்சை அடைந்தான். பக்கத்தில் இருந்தவர்கள் அவன் இறந்துவிட்டான் என்று எண்ணினார்கள். அவன் கல்லைப்போல அசைவற்றுக் கிடந்தான்.

அச்சமயம் கண்ணப்பர் என்பவர் அப்பக்கம் வந்தார். அவர் மிகவும் இளகிய மனம்

உடையவர். அவர் சாரதியைத் தம் வீட்டுக்குத் தூக்கிச் சென்றார்; அவனுக்குப் பல சிகிச்சைகள் செய்து, அவனைக் குணப்படுத்தினர்; தம் வீட்டிலேயே அவனைப் பத்து நாட்கள் வைத்து ஆதரித்தார்; பின்பு அவன் விடை பெற்றுச்



செல்லுகையில், அவனுக்கு ஐந்து ரூபாயும் கொடுத்து உதவினர். சாரதி அயல் நாடு சென்றான்.

இருபது வருடங்கள் சென்றன. இதற்குள் சாரதி, சிறு சிறு வியாபாரங்களைச் செய்தான். அவன் தொட்டதெல்லாம் பொன்னாய் விளைந்தது. அவன் பத்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்திற்கு அதிபதியாயினன்.

ஒரு நாள் சாரதி, கண்ணப்பரைப் பார்க்க அவர் ஊருக்கு வந்தான். அவரைக் கண்டதும், அவன் கண்களில் தண்ணீர் ததும்பியது. அப்பொழுது அவர், எழுபது வயது சென்ற மூதியவராயிருந்தார். அவர் கண்கள் ஒளி மழுங்கி இருந்தன. அவர் வறுமையால் வாட்டமுற்றிருந்தனர்.

சாரதி, அவர் அடிபணிந்து, "ஐயா, நீங்களே என் தந்தையார். அன்று நீங்கள் செய்த உதவியை நான் என்றும் மறவேன். உங்களால் நான் அன்று பிழைத்தேன். உங்களால் நான் இன்று சீமானாய் இருக்கிறேன். என் செல்வமெல்லாம் உங்களுடையதே," என்றான்; பின்பு கண்ணப்பருக்கு வேண்டிய சௌகரியங்களை எல்லாம் செய்தான்.

ஓர் அழகான வீட்டில் கண்ணப்பர் வசித்து வருகிறார். அவர் நல்ல உருசியான உணவுகளைக் காலம் தவறாமல் புசிக்கிறார். இரண்டு வேலையாட்கள் அவரைக் கவனித்து வருகிறார்கள். இந்த ஏற்பாடுகளை எல்லாம் செய்தவன் சாரதி என்பதை நீங்கள் அறியலாம்.

19. நட்பின் பயன்

கோபாலனும், கோவிந்தனும் உண்மையான நண்பர்கள். அவர்கள் இளமையில் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தார்கள். அப்பொழுது அவர்கள் கூடித்திரிந்தார்கள்; சேர்ந்து உண்டார்கள்; ஒரே இடத்தில் படித்தார்கள்; உறங்கினார்கள். அவர்களது உயர்ந்த நட்பைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

கோவிந்தன் தந்தையார் ஓர் அரசாங்க அதிகாரி. அவரை வேறு ஊரில் வேலை பார்க்க மாற்றிவிட்டார்கள். அவருடன் கோவிந்தனும் சென்றான். அதனால், இரு நண்பர்களும் பிரிய நேரிட்டது. பிரியுமுன் அவர்கள் மிக்க வருத்தமடைந்தார்கள்; ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு கதறினர்.

கோவிந்தன், தன் தந்தையாருடன் கோவலூர் என்னும் ஊருக்குச் சென்றான்; ஆங்கு ஒரு கலாசாலையில் சேர்ந்து படித்தான். ஆனால், அவன் கோபாலனை மறக்கவில்லை; அடிக்கடி அவனுக்குக் கடிதம் எழுதுவான். வந்த கடிதங்களுள் ஒவ்வொன்றையும் அவர்கள் பல முறை படிப்பதுண்டு.

முப்பது வருஷங்கள் சென்றன. இரு நண்பர்களும் வெவ்வேறு இடங்களில் வசித்து வந்

தார்கள். இவ்வளவு நீண்ட காலமாய் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. ஆகையால், அவர்கள் அடையாளங்களேயும் மறந்து போனர்கள். ஆனல், அவர்களது நட்பு மட்டும் சிறிதும் மாற வில்லை. கோவிந்தன் பல வியாபாரங்கள் செய் தான்; அதிகமாகப் பணம் சம்பாதித்தான். வியாபாரச் சங்கத்திற்கே அவன் தலைவனுமா ஞன். அவன் பேரும் புகழும் பெற்றுச் சிறப்பாய் வாழ்ந்தான். அவன் அடிக்கடி மாணவர்களுக் கும் வியாபாரிகளுக்கும் உபந்நியாசங்கள் செய் வதுண்டு. அவைகள் பத்திரிகைகளில் வெளி வரும். கோபாலன் அவைகளைப் படித்து மகிழ் வான்.

ஆனல், கோபாலன் நிலைமை மிகவும் கேவ லமாய் இருந்தது. ஏற்கெனவே அவன் ஏழை. பள்ளிக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் அவன் படிப்பை நிறுத்திவிட்டான்; சில நாட் களில் அவன் ஒரு பெரிய குடும்பத்திற்குத் தலை வனுனன். தன் பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் அவன் கஷ்டப்பட்டான். அவனு டைய இரு புதல்வியரும் கலியாணத்திற்குரிய பருவம் அடைந்தனர். ஆனல், கையில் பண மில்லாததால், அவர்களைக் கலியாணம் செய்து

கொடுக்க முடியாமல், கோபாலன் தவித்தான். கவலையால் அவன் உடல் மெலிந்து போயிற்று.

இவ்விதம் அவன் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், தன் நண்பன் கோவிந்தனை நினைத்தான்; அவனிடம் போய்த் தன் குறைகளைக் கூற எண்ணினான்; ஒரு நாள் அவனிருக்கும் ஊருக்குப் பயணமானான்.

அவன் நான்கு நாட்கள் பிரயாணம் செய்து நண்பன் வசிக்கும் ஊர் வந்து சேர்ந்தான்; அவன் வீட்டை விசாரித்துக் கண்டுபிடித்தான். அவன் வீட்டு வாயிலில் அவனைப் பார்க்கப் பலர் கூடி இருந்தனர். அவர்கள் பக்கத்தில் கோபாலனும் அமர்ந்தான். அவர்கள் கோவிந்தனைப் பற்றிப் பெருமையாகப் பேசினார்கள். கோபாலன் அவற்றைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான்.

சில நிமிஷங்களுக்குள் கோவிந்தன் அங்கு வந்தான். ஒரு முக்கியமான வேலையாக அவன் வெளியே செல்ல வேண்டியிருந்தது. அதனால், அவன் தன்னைப் பார்க்க வந்தவர்களை எல்லாம் மாலை வரும்படி சொன்னான்; தனக்காகக் காத்திருந்த வண்டியில் ஏற விரைந்து சென்றான்.

அப்பொழுது, அவன் ஒரு பக்கத்தில் நின்ற தன் நண்பனைப் பார்த்தான்; அவனைப் பல நிமிஷங்கள் உற்று நோக்கினான். பின்பு அவனிடம்

ஓடிவந்து, "நீ என் நண்பன் கோபாலன் அல் லவா? நீ ஏன் இவ்வளவு இளைத்திருக்கிறாய்? வா, உள்ளே போகலாம்," என்று அவனை அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குள் சென் றான். அவன் அவசரமாகப் பார்க்க வேண்டிய வேலையையும் மறந்தான்.

அவன் தன் நண்பன் நிலைமையை அறிந்து வருந்தினான். "நண்பா, நான் க்ஷேமமாய் இருக்கையில், நீ ஏன் வருந்த வேண்டும்! என் சொத்தெல்லாம் உன்னுடையதல்லவா? இதற்கு முன்னமே நீ என்னிடம் வந்திருக்கலாமே! போனது போகட்டும். இன்றே உன் குடும் பத்தை இவ்விடம் வரவழைப்போம். இனி நீ என்னிடமே இருக்க வேண்டும். நாம் இருவரும் வியாபாரம் செய்வோம். உனக்கு இனி எவ்விதக் கவலையும் வேண்டா," என்றான்.

கோபாலன், தன் குடும்பத்தை அழைத்து வந்தான். அவன் கோவிந்தன் வீட்டுக்கு அரு கில் வசித்தான். அவன் பெண்களுக்குக் கலி யாணம் சிறப்பாய் நடந்தது. கோபாலனையும், கோவிந்தன் வியாபாரத்தில் கூட்டாகச் சேர்த் துக்கொண்டான். கோபாலன் கஷ்டம் நீங்கிற்று. அவன் இனிது வாழ்ந்தான்.



20. சிக்கனத்தால் சிறப்புற்ற சிதம்பரம்

பாலாறு என்னும் ஊரில் சுந்தரம், சிதம்பரம் என்னும் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் இணை பிரியாத நண்பர்கள்.

இளமை முதற்கொண்டே சிதம்பரம் சிக்கனம் உள்ளவன். அவன் பள்ளியில் பயிலும் காலத்தில் பழைய புத்தகங்களையே விலைக்கு வாங்குவான்; அவைகளை எல்லாம் நன்கு தைத்து, அட்டைகள் போட்டுப் புதியனவாக்கி வைத்துக் கொள்ளுவான்.

“புதிய புத்தகங்களை வாங்குவதால் அதிகம் செலவாகும். அது என் தந்தையாருக்குக் கஷ்டத்தை விளைக்கும்,” என்று அவன் சொல்லுவான்.

வருஷம் தொடங்கும்பொழுது அவன் தந்தையார் அவனுக்கு இரண்டு ஆடைகளும், இரண்டு சட்டைகளும் வாங்கித் தருவார். அவைகளைக்கொண்டே அவன் அவ்வருஷத்தைக் கடத்திவிடுவான். வீட்டில் உண்ணுவதைத் தவிர, அவன் சிற்றுண்டிச் சாலைகளில் உண்பதில்லை. ‘‘சிற்றுண்டிச் சாலைகளில் உண்பதால் ஏற்படுவது வீண் செலவுதானே!” என்று அவன் சொல்லுவான்.

சுந்தரம், சிதம்பரத்துக்கு முற்றிலும் மாறுன குணம் உள்ளவன்; வீண் ஆடம்பரமும் உடையவன். பெருமைக்காக அவன் வீண்செலவு செய்வான். அவன் புதிய புதிய சாமான்களை வாங்குவான். காலணுச் செலவு செய்ய வேண்டிய இடத்தில் அவன் கால்ரூபாய் செலவு செய்வான். தன்னை அழகு செய்துகொள்ளுவதில் அவன் அதிகம் செலவு செய்வது வழக்கம்.

சுந்தரமும், சிதம்பரமும் படிப்புமுடிந்ததும் வேலையில் அமர்ந்தார்கள். சுந்தரம் மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம் பெற்றுன். ஆனல், சிதம்

பரமோ, ஒரு சிறிய வேலையில் அமர்ந்து மாதம் முப்பது ரூபாயே சம்பாதித்தான்.

சுந்தரம், தன் மனப்படி எல்லாம் பணத்தைச் செலவு செய்தான். அவன், விலை உயர்ந்த ஆடைகளை அணிந்தான்; அழகிய பங்களாக்களில் வசித்தான்; மக்களுக்கு எல்லாம் அதிகம் செலவு செய்து கலியாணம் முடித்தான். எப்பொழுதும் அவன் மோட்டாரிலேதான் சவாரி செய்வான். இவ்விதம் அவன் வருமானத்தை எல்லாம் செலவு செய்து வந்தான்.

சிதம்பரம், வழக்கம் போலவே சிக்கனமாகச் செலவு செய்தான்; சீரும் செட்டுமாகக் குடும்பத்தை நடத்தினுன்; மாதம் பத்து ரூபாய் பாங்கியில் சேர்த்து வந்தான்.

முப்பது வருஷங்கள் கழிந்தன. இரு நண்பரும் தம் வேலையைவிட்டு விலகித் தம் வீடுகளில் வசிக்கலாயினர். அப்பொழுது சுந்தரத்தின் கையில் ஒரு காசும் இல்லை. முதுமைக் காலத்தில் அவன் வறுமையால் மிக வருந்தினுன்.

சிதம்பரம் இன்பமாய் வாழ்ந்தான். அவன் முப்பது ஆயிரம் ரூபாய் பாங்கியில் சேர்த்து வைத்திருந்தான். அத்துடன் அவனுக்குச் சொந்தமாய் இரண்டு வீடுகளும் இருந்தன. ஒரு குறைவும் இன்றி அவன் முதுமையில் இன்பமாய் வாழ்ந்தான்.

அதிகம் சம்பாதித்தவன் கஷ்டப்படுவானேன்? குறைவாகச் சம்பாதித்தவன் சுகமாக வாழ்வானேன்? மாணவர்களே, இது உங்களுக்கு ஒரு புதுமையாய்த் தோன்றலாம். இந்தப் புதுமையை உண்டாக்கியது எது? சிக்கனம் அல்லவா? சிக்கனமே எல்லாச் சிறப்புக்கும் மூல காரணம் என்பது இதனுல் விளங்குகிறதல்லவா?

---

21. பணம்

ஒரு நாள் குணசீலர் என்னும் பெரியார் ஒரு பாடசாலையைப் பார்வையிட வந்தார். அச்சமயம் அவர் மாணவர்களுக்குப் 'பணம்' என்னும் விஷயத்தைப் பற்றி ஓர் உபந்நியாசம் செய்தார்:

"மாணவர்களே, உங்களைப் பார்க்க எனக்குச் சந்தோஷமாய் இருக்கிறது. உங்கள் தலைமை ஆசிரியர் என் நண்பர். அவர் கேட்டுக்கொண்டபடி உங்களுக்குச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 'பணம்' என்னும் விஷயத்தைப் பற்றி நீங்கள் அறிய வேண்டியது அவசியம்.

" 'பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை,' என்பது பொய்யா மொழி. பணம் உள்ளவனே, வீடு கட்டுவான்; நிலங்களை வாங்குவான்;

நல்ல உடைகளை உடுத்துவான்; உருசி உள்ள உணவுகளை உண்ணுவான்; பல நாடுகளைப் போய்ப் பார்ப்பான்; தன் மக்களுக்கும், நண்பர்களுக்கும், சுற்றத்தார்களுக்கும் பல நன்மைகளைச் செய்வான். பணம் இல்லாதவனுக்கு மேலே கூறிய இன்பங்கள் உண்டா? ஆகையாலேதான் பணம் இல்லாதவனைப் பிணத்துக்குச் சமானம் என்று கூறுகிறார்கள். அவன் உயிருடன் இருப்பதால், அவனுக்கு உபயோகம் இல்லை. அவனால் பிறருக்கும் ஓர் உபயோகமும் இல்லை.

"'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்,' என்னும் பழமொழியை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இந்தப் பழமொழி பணத்தின் பெருமையை நன்கு சிறப்பித்து கூறுகிறதல்லவா!

"நம் நாட்டில் இருந்த ஒவ்வொரு கவிஞரும், பணத்தின் பெருமையையும் வறுமையின் கொடுமையையும் பற்றிப் பாடி இருக்கின்றனர். இவ்வுண்மைகளைத் தெளிவாகக் காட்டக்கூடிய பல பழமொழிகளும் நம் நாட்டில் வழங்குகின்றன. 'பணம் பாதாளமட்டும் பாயும்,' என்னும் பழமொழியின் கருத்து என்ன? பணம் உள்ளவன் எந்தக் காரியத்தையும் எளிதில் செய்வான் என்பதுதான் அதன் கருத்து.

"'கொடிது கொடிது வறுமை கொடிது!' என்று பெரியார் கூறியிருக்கின்றனர். பணம் இல்லாதவன் துன்பங்கள் பல அனுபவிக்கின்ருன். அவனை எவரும் ஒரு பொருளாக நினைப்பதும் இல்லை. அன்னை, மனைவி முதலிய அனைவரும் அவனை மதிப்பதில்லை. அவன் சொல்லை ஒருவரும் கேட்கமாட்டார். 'ஏழை சொல் அம்பலம் ஏருது,' என்பது மற்ருெரு பழமொழி. வறுமையைப் பிணிக்கே ஒப்பிடுகின்ருர்கள். வறுமையுள்ளவன் நோயாளிக்குச் சமானமாகிருன்.

"ஆகையால், பல நன்மைகளையும் பயக்கக் கூடிய பொருளை நாம் தேட வேண்டுவது மிகவும் அவசியம். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு,' என்பது பெரியார்களின் வாக்கு. ஊக்கம், உழைப்பு, அறிவு, பொறுமை முதலிய குணங்களை உடையவனே பணத்தைத் தேட முடியும்.

"விவசாயம், வியாபாரம், கைத்தொழில், உத்தியோகம் முதலியன செய்வதிலிருந்து பணம் சம்பாதிக்கலாம். சிலர் இவைகளில் ஏதாவது ஒன்றைத் தம் தொழிலாக வைத்துக்கொள்கின்றனர். சிலர், மிக்க ஊக்கமும் சாமர்த்தியமும் உள்ளவராய் இருக்கின்றனர்; பல துறைகளிலும் பணம் தேடுகின்றனர்.

"பணம் சேகரிக்க விரும்புகிறவன் அதைத் தேடுவது மட்டும் போதாது; அதைப் பத்திர மாகப் பாதுகாக்கவும் வேண்டும். 'பொருள் தனைப் போற்றி வாழ்,' என்பது ஓர் அருமை யான பழமொழி. செல்வத்தைச் சீராகச் செலவு செய்யாவிடில், அது நம்மை விட்டுச் சென்று விடும்.

"செல்வத்தைச் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும். ஆடம்பரம் உடையவனும், தீய பழக்கம் உடையவனும் பணத்தைத் தொலைத்து விடுவர். தற்பெருமை கொண்டும், சிலர் பணத் தை வாரி இறைத்து வறிஞராகின்றனர்.

"பணம் உள்ளவன் குணம் உள்ளவனாகவும் இருத்தல் வேண்டும். குணம் இல்லாதவனிடத் தில் பணம் நீடித்து நில்லாது. பணமும் குண மும் உடைய ஒருவனை உலகம் மெச்சும். அவ னுக்கு எந்நாளும் ஒரு குறைவும் ஏற்படாது," என்று கூறித் தம் சொற்பொழிவை முடித்தார்.

மாணவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். தலைமை ஆசிரியர் குணசீலருக்கு வந்தனம் கூறி னர்.

The B. N. Press, Mount Road, Madras.

2174